# 6 நம்பிக்கையில் குணம்

**யோவான் 4: 46 -54**

**கதை கூறுநர்** : இயேசு கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணத்தில் முதலாவது அரும் அடையாளத்தைச் செய்ததை நீங்கள் அறிந் திருப்பீர்கள். இதோ கானா நகரில் இடம்பெற்ற இன்னுமொரு அரும் அடையாளம்.

**இளைஞன்** : இம்முறை இறையருளை அனுபவித்தவர் யார்?

**கதை கூறுநர்** : அவர் ஒரு அரச அலுவலர்; அந்திபஸ் ஏரோது அரசனுக்கு பணி செய்யும் அலுவலர் அவர் அவரது மகன் கப்பர்நகூமில் நோயாளராக இருந்தான். அப்போது யூதேயாவிலிருந்து கலிலே யாவில் உள்ள கானாவுக்கு இயேசு வந்திருப்பதை அவன் கேள்விப்பட்டான்.

**இளைஞன்** : அப்போது அவன் தனது மகனை கப்பர்நகூமிலிருந்து கானாவுக்கு இயேசுவிடம் அழைத்து வந்தாரா?

**கதை கூறுநர்** : இல்லை, அரச அலுவலர் இயேசுவிடம் சென்றார். ஒரு கணம் கேளுங்கள். அவர் இயேசுவைச் சந்திக்கச் சென்றார்.

**அரச அலுவலர்** : ‘‘சாகும் தறுவாயிலிருக்கும் என் மகனை நலமாக்க வாரும்.’’

**இயேசு** : ‘‘அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் கண்டாலன்றி நீங்கள் நம்பவே மாட்டீர்கள்.’’

**அரச அலுவலர்** : ‘‘ஐயா, என் மகன் இறக்கு முன் வாரும்.’’

**இயேசு** : ‘‘நீர் புறப்பட்டுப் போம். உம் மகன் பிழைத்துக் கொள்வான்.’’

**கதை கூறுநர்** : அரச அலுவலர், இயேசு தம்மிடம் சொன்ன வார்த்தையை நம்பிப் புறப்பட்டுப் போனார். அவர் போய்க் கொண்டிருக்கும் போதே அவருடைய பணியாளர்கள் அவருக்கு எதிர் கொண்டு வந்தார்கள்.

**இளைஞன்** : அவர்கள் ஏன் வந்தார்கள்? ஏதாவது விசேட காரணம் இருந்ததா?

**கதை கூறுநர்** : நீங்களே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

**பணியாளர்** : உங்கள் மகன் பிழைத்துக் கொண்டான்.

**அரச அலுவலர்** : எத்தனை மணிக்கு நோய் நீங்கியது?

**பணியாளர்** : நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு காய்ச்சல் நீங்கியது.

**அரச அலுவலர்** : ("எம் மகன் பிழைத்துக் கொள்வான்." என நினைத்தல்)

**கதை கூறுநர்** : மேற்படி அரும் அடையாளத்தைக் கண்ட அரச அலுவலரும் அவரது வீட்டார் அனைவரும் இயேசுவை நம்பினர்.

**இளைஞன்** : இயேசு கலிலேயாவில் அரும் அடையாளங்களைச் செய்திருக் கிறார் அல்லவா?

**கதை கூறுநர்** : ஆம் இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்த பிறகு செய்த இரண்டாவது அரும் அடையாளம் இதுவாகும். அவருக்கு எல்லாக் கௌரவமும் மகிமையும் உண்டாவதாக!

மேற்படி நிகழ்வில் எமது வாழ்வுக்குக் கிடைக்கும் முன்மாதிரிகள்.

அரச அலுவலரிடமிருந்து வெளிப்பட்ட பண்புகள்:

- அதிகாரம் செல்வம் காணப்படினும் தனது மகனின் மரணநிலையில் அவன் குணம் அடைய வேண்டுமென விசுவாசத்துடன் இயேசுவிடம் வருதல்
- கப்பர்நகூமிலிருந்து கானா நகருக்கு ஏறக்குறைய 20 மைல் தூரம் இருந்தும் மகன் நலமடைய வேண்டுமென எதிர்பார்த்து அவன் இயேசுவிடம் வந்தார்
- அவர் வேதனை நேரத்தில் விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் இயேசுவை அழைத்தல்

- அவர் எதிர்பார்த்தவாறு இயேசு செயற்படாவிட்டாலும் இயேசுவுக்கு விசுவாசத்துடன் கீழ்ப்படிதல்

இவ்வாறாக, இயேசு குணமளிக்கும் கடவுள் என்பதை அலுவலர் கண்டறிந்தார். இயேசு செய்த பெரிய அரும் அடையாளம் மூலமாக ஆண்டவரின் மகிமையைக் கண்டார். வீட்டார் அனைவரும் இயேசுவை விசுவாசித்தனர்.

நாங்கள் நோய்வாய்ப்படும் போதும்,

- இயேசு நோயாளரைக் குணமாக்கும் கடவுள் என்பதை விசுவாசிப்போம்.
- விசுவாசத்துடன் அவரிடம் செல்வோம்.
- குணம் வேண்டி விண்ணப்பம் செய்வோம்.
- இயேசுவில் நம்பிக்கை கொள்வோம்.
- அவரிடத்தில் அடையாளங்களை எதிர்பார்ப்போம்.
- முழு மனதுடன் அவருக்குக் கீழ்படிவோம்.
- நம்பிக்கையுடன் அரும் அடையாளத்தை அனுபவிப்போம்.
- பிறரின் தேவைகளை இயேசுவிடம் கொண்டு செல்வோம்.

## செயற்பாடு

1. கடவுளிடம் குணம் பெறுவதற்கு எம்மிடம் காணப்பட வேண்டிய குணாதிசயங்களைக் குறிப்பிடுக.

2. நோயுற்ற உமது நண்பன் / நண்பி குணமாகிட விண்ணப்பம் ஒன்றை எழுதவும்.